REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 15உ செவ்வாய் (1—10—57) ★ ★ வெளியூர்: புரட்டாசி 16உ புதன் (2—10—57) [இதழ் 93

டெல்லியின் புதிய இறக்குமதிக் கொள்கை

இறக்குமதிக் கொள்கையில் கடந்த மூன்று மாதங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் கண்டிப்பும், சிக்கனமும் இன்னும் ஆறுமாதங்களுக்கு—அக்டோபர் முதல் 1958 மார்ச் முடிய நீடிக்கும் என்று டெல்லி சர்க்கார் அறிவித்திருக்கிறார்கள்.

புகையிலைப் பொருள்கள், உல்லன் நூல்கள், சைக்கிள்கள், கடிகாரங்கள், பவுண்டன் பேனாக்கள், கண்ணாடிச் சாமான்கள், ரேசர் பிளேடுகள் உள்ளிட்ட சில வெட்டுக் கருவிகள், பீர் முதலிய சாராய வகைகள் ஆகிய பல சாமான்களுக்கு இறக்குமதி அனுமதி தரப்படமாட்டாது என்றும், சினிமாவிற்கான கச்சா பிலிம்கள் இறக்குமதியும் வெகுவாகக் குறைக்கப்பட்டிருப்பதாகவும் சர்க்கார் அறிவிப்புக் கூறுகிறது.

இந்தியைத் தேசீய மொழி ஆக்குவது

முடியாத காரியம்—பகற்கனவு காணுதீர்!

வடநாட்டு வெறியர்களுக்கு ஆச்சாரியார் எச்சரிக்கை

மாநிலங்களுக்கு ரத்து அதிகார உரிமை வேண்டும்

என்றென்றைக்கும் ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும்

இந்தியைத் திணிப்பது அநீதியானது-நேர்மையற்றது

'கட்டாய இந்தியைக் காட்டி ஓட்டுப் பெறுவீரா?'

டெல்லிக்கு சி. ஆர். தரும் அறைகூவல்

சென்னை, அக். 1—

"என்றைக்காவது ஒருநாள் இந்தி, இந்தியாவில் ஒரே தேசிய மொழியாக ஆகிவிடும் என்று எவரேனும் கருதுவார்களேயானால் அது வெறும் பகற்கனவுதான்" என்று திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் கருத்தறிவித்துள்ளார்.

"இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் ஏற்றுக்கொண்டாலன்றி, இந்தி, இந்தியாவின் ஆட்சி மொழியாக்கப்படக் கூடாது; ஏதாவது ஒரு மாநிலம் இந்தி கூடாது என்று கூறினாலும், இந்தி கைவிடப்பட வேண்டும்" என்றும் அவர் மிகத் தெளிவாகவும் திட்டமாகவும் கருத்தறிவித்திருக்கிறார்.

தியாகராயநகர் கூட்டம் ஒன்றில், 'ஆட்சி மொழிக் கமிஷன் அறிக்கை' பற்றிப் பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"ஆங்கிலம் கடந்த பத்தாண்டுக் காலமாக-சுதந்திரம் பெற்ற பின், ஆட்சிமொழியாக இருந்து வந்திருக்கிறது; நன்றாகவும் அது பயன்பட்டிருக்கிறது; பின், மத்திய சர்க்காரின் மொழியாகவும், மாநிலங்களுக்கிடையே கடிதப் போக்குவரத்திற்கான மொழியாகவும் விளங்கும் அதனை ஏன் ஒதுக்கித்தள்ள வேண்டும்? வெறும் கௌரவமோ, உணர்ச்சிகளோ, இந்த பிரச்சினைக்கு முடிவு காண்பதில் இடம்பெற முடியாது.

"இந்தி ஆட்சி மொழியாக்கப்பட்டால், இந்தியாவில் ஐந்தில் மூன்று பகுதியாக விளங்கும் இந்தி வழங்காத பகுதிகள், இந்தியைத் தாய் மொழியாகக்கொண்ட பகுதிகளோடு ஒப்பிட்டால், தொடர்ந்து ஒரு பிரதிகூலமான நிலையிலேயே இருக்க நேரிடும்.

"நீதிமன்றங்களில் உபயோகப்படுத்தப்படுவதற்கு இந்தி இலாயக்கில்லை என்ற வாதம், நிர்வாகத்தைப் பொறுத்தும் அந்த அளவுக்குப் பொருந்தக்கூடியதாகும்.

"இந்தியில் சர்க்கார் காரியங்கள் நடைபெற வேண்டுமானால் நீதிமன்றங்களைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை — ஒருவர் அந்த மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

"ஆங்கிலத்தைத் தொடர்ந்து ஆட்சி மொழியாக வைத்திருப்பதற்காக, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்பதல்ல; அப்படியே அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டியது அவசியம் என்று கருதப்பட்டாலும், மாற்றங்களைச் செய்வது கடினமானதல்ல.

"இந்தியா, ஒரு பெடரல்முறை சர்க்கார் வேண்டுமென ஏற்றுக்கொண்டிருக்கிறது; அது ஒரு சட்டக் கற்பிதமாகக் கருதப்பட்டிருக்கலாம்; ஆனால் அரசியல்

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 10/57

அக்டோபர் 13:

இந்தி எதிர்ப்பு நாள்

நாடெங்கும் கொண்டாடுக!

இந்தியப் பேரரசு தென்னகத்தின்மீது இந்தியைத் திணிக்கும் அநீதியை எதிர்த்து, 1957 அக்டோபர்—13, ஞாயிற்றுக் கிழமையை 'இந்தி எதிர்ப்பு நாளாக'க் கொண்டாடுமாறு தி. மு. கழகக் கிளைகளையும், துணை அமைப்புகளையும், தென்னாட்டின் நலனிலும், திராவிட மொழிகளின் நலனிலும் அக்கறை கொண்ட பிற அமைப்புகளையும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்று இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள்—பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றை மிகச் சிறப்பாக நடத்துவதோடு, இந்தியை எதிர்க்கும் தீர்மானத்தை நிறைவேற்றி அதன் ஒருபடியை இந்தியப் பேரரசின் உள்நாட்டமைச்சருக்கும், மற்றொரு படியை மாநில அரசியலாருக்கும், வேறொரு 'படியைத் தலைமைக் கழகத்திற்கும் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

அமைதிக்குக் கேடு விளையாத வகையில், கண்ணியத்தோடும்— கட்டுப்பாட்டோடும் கடமையாற்ற வேண்டுகிறோம்.

30—9—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர் தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'தமிழ்ப் பகுதிகள் பறிபோகின்றனவே!'

ஆந்திர-எல்லைத் தகராறு முடிவு குறித்து காமராசரின் வருத்தம்!

சென்னை, செப். 30—

"எல்லைப் பிரச்சினை தீர்க்கப்பட்ட முறைபற்றி சந்தோஷம் கொண்டாடுகிறவர்கள் இருக்கிறார்கள்; நான் அப்படி இல்லை. இப்போது ஆந்திராவிலிருந்து சென்னைக்குத் தரப்படும் பகுதிகளில் வாழ்பவர்கள் 1953 வரை ஒன்றுபட்ட சென்னை மாநிலத்தில் வாழ்ந்தவர்கள் தான்.

"ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டபோது, அவர்கள், சென்னையிலிருந்து பிரிக்கப்பட்டார்கள். இந்த மாற்றத்தை விரும்பாமல்தான் அவர்கள், தமிழ்நாட்டுடன் சேரவேண்டுமென முயற்சித்தனர். இப்போது அவர்களின் முயற்சி வெற்றிபெற்றிருப்பதாகக் கொள்ளலாம்.

"ஆனால் இப்போது, சென்னையிலிருந்து மூட்டைகட்டி ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பப்படுகிறவர்களின் கதி என்ன? அவர்கள் இத்தனைக் காலமாய் சென்னை மாநிலத்தில் வாழ்ந்து வந்தவர்கள்; அவர்கள் ஒரு போது தாங்கள் சென்னையிலிருந்து துண்டிக்கப்படுவோம் எனக் கனவுகூடக் காணாதவர்கள். ஒரு குற்றமும் செய்யாத அவர்கள் இப்போது, மூட்டைகட்டி ஆந்திரத்துக்கு அனுப்பப்படுகிறார்களே! இந்த நிலைமையில் ஒருவரால் எப்படிச் சந்தோஷப்பட முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை? இப்போது, இந்த எல்லைப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடியவர்கள், மேற்குறிப்பிட்ட விஷயம் பற்றி எந்தவிதச் சிந்தனையும் செலுத்தியதாகத் தெரியவில்லை என்பது கண்டு வருந்துகிறேன்"

என, முதன்மந்திரி காமராசர், படாஸ்கர் அறிக்கைப்படி, எல்லைப் பிரச்சினைக்கு பரிகாரம் தேடுவது என்ற முடிவு பற்றிக்கேட்டபோது குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர், பிரச்சினைக்கு முடிவு காணப்பட்டுவிட்டது என்றும், புதிய எல்லைகளை வகுத்து சட்டம் கொண்டுவர வேண்டியது டெல்லி சர்க்கார்தான் என்றும் கூறியிருக்கிறார்.

'வடலூராரர் பிறப்பிடத்தைப் பாதுகாப்பீர்'

ஓமாந்தூரார் வேண்டுகோள்

கடலூர், அக். 1—

தென்னாற்காடு மேட்டுக்குப்பம் பகுதியில் வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள் வாழ்ந்தார் என்றும், அந்த இடத்தை நெய்வேலிப் பகுதியிலிருந்து விலக்க வேண்டும் என்றும், அடிகளாரின் பிறப்பிடத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது என்றும் முன்னாள் சென்னை முதலமைச்சர் ஓமாந்தூர் இராமசாமி(ரெட்டியார்) வலியுறுத்திக்கூறியுள்ளார்.

'அரசாங்கம் இதைச் செய்ய மறுத்தால் 1,000 தொண்டர்களைக் கொண்டு போராட்டம் நடத்த நேரிடும்' என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மாநில கவர்னர் ஜான் மறைவு

சென்னை, அக். 1—

தமிழ் மாநில கவர்னர் திரு. ஏ. ஜே. ஜான் அவர்கள், இன்று அதிகாலையில் திடீரென இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிவிக்க மிக வருந்துகிறோம்.

கடந்த சிலநாட்களாக கவர்னர், மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார். கடந்த செப். 22-ந்தேதியன்று அவருக்கு அறுவை சிகிச்சை யளிக்கப்பட்டது. அன்று முதல், உடல் தேறிவருவதாக டாக்டர்கள் தெரிவித்து வந்தனர்; ஆனால், திடீரென நேற்று மாலையிலிருந்து அவருக்குக் காய்ச்சல் அதிகரித்து இன்று காலையில் 1-50 மணிக்கு அவர் உயிர் துறந்தார்.

ஸ்ரீபிரகாசாவிற்குப் பிறகு கடந்த 1956 டிசம்பர் 10-ந் தேதியன்று ஜான், மாநிலத்தின் கவர்னராகப் பதவி ஏற்றார்.

அவரது பிரிவால் வாடும் அவரது துணைவியார், மற்றும் உறவினர்களின் துக்கத்தில் நாமும் பங்கு கொள்ளுகிறோம்; அவர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். —(ஆ-ர்)

இந்திக்கு தமிழ் நாட்டில் ஆதிக்கமா?

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 1—10—57 செவ்வாய்

அந்தோ! பறிபோகிறது!

தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியும் அதிருப்தியும் அளிக்கக்கூடிய ஒரு தீர்ப்பை படாஸ்கர் என்பார் அளித்துள்ளார். அம்முடிவை தமிழக அரசாங்கத்தின் சார்பில் முதலமைச்சர் காமராசர் ஏற்றுக்கொண்டுவிட்டார் எனச் செய்தி தரப்பட்டிருக்கிறது.

இம்முடிவுதான் 'இறுதி'யானது; இனி இதுபற்றி விவாதத்திற்கே இடமில்லை என்று, முடிவை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்தத் தீர்ப்பின்படி செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திருவள்ளூர், பொன்னேரி வட்டங்களிலுள்ள முன்னூற்றுப் பத்து சதுரமைல் அளவுள்ள நிலப்பரப்பு ஆந்திர மாநிலத்துடன் இணைக்கப்பட்டுவிடும். அதுவுமன்றி, செங்கற்பட்டு மாவட்டத்தின் நீர்வளத்திற்கு எனக் கட்டப்பட்ட ஒரே ஒரு நீர்த்தேக்கத் திட்டமான ஆரணியாறு அணைக்கட்டும் ஆந்திராவுடன் இணைக்கப்பட்டுவிடும்.

இதற்கு மாறாக, திருத்தணியையும், அதைச் சுற்றியுள்ள முன்னூற்றுஇருபது சதுரமைல் அளவுள்ள நிலப்பரப்பையும் தமிழகம் பெறப்போகிறது.

இந்த அளவுடனும் இந்த நிலமாற்று பேரம் இருந்துவிடவில்லை. சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கிருட்டினகிரி வட்டத்தைச் சேர்ந்த மூன்று சிற்றூர்களும் ஆந்திர மாநிலத்திற்கு வழங்கப்படுகிறது.

தமிழகத்துடன் இணைக்கப்பட இருக்கும் திருத்தணியும், அதைச் சுற்றியுள்ள நிலப்பரப்பும், ஆந்திரத்துடன் சேர்க்கப்பட இருக்கும் ஆரணியாறு அணைக்கட்டும், அத்துடன் தொடர்பு கொண்டுள்ள நிலப்பரப்பும், நிலப்பரப்பளவில் கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கவில்லை. இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் பத்து சதுர மைல் அளவுடன்தான் நின்றுவிடுகிறது.

ஆனால், நிலவளம் நீர்வளம், குடிவளம் என்ற இன்றியமையாத வளங்களைக்கொண்டு, இந்த நிலமாற்ற பேரத்தை மதிப்பிடப்புகும் எவரும், தமிழகத்தில் சேரப்போகும் பகுதியும், ஆந்திரத்துடன் இணையப்போகும் பகுதியும் ஒன்றுபோல் இருப்பதுதான் எனக் கூறத் துணியார். முன்னையது உமி—பின்னையது அரிசி என்றுதான் அறுதியிட்டுக் கூறுவர்.

ஆரணியாறு அணைக்கட்டும், அதைச் சார்ந்த நீர்வளம் மிக்க செழும் நிலப்பரப்பும் ஆந்திரத்திற்குப் போனல்போகிறது; திருத்தணியும் அதைச் சுற்றியுள்ள வளம் பெறும் வாய்ப்பற்றுக் கிடக்கும் நிலப்பரப்பும் தமிழகத்திற்குக் கிடைத்தால் போதும் என்று பூரித்து மகிழும் பேரறிவாளர்களும் உண்டு. திருத்தணி போனல்போகிறது; ஆரணியாறு அணைக்கட்டு தமிழகத்திற்கு இருக்கட்டும் என வாதிடுகிற பெரியவர்களும் உண்டு. ஆனல் நம்மைப் பொறுத்தவரையில், இரண்டும் தமிழகத்தில் இருக்கவேண்டும்-இருந்தே தீரவேண்டும் என்ற உறுதிப்பாடு கொண்டிருப்பவர்களாவோம்.

இக்கருத்தை வற்புறுத்தி, திருவண்ணாமலையில் அண்மையில் கூடிய நமது கழக மாநாட்டில் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளோம். அத்தீர்மானம் இங்கு அப்படியே தரப்படுகிறது :—

"படாஸ்கர் தீர்ப்பு மக்களுக்குத் தெளிவாக இதுவரை அறிவிக்கப்படாதிருக்கிற வருந்தத்தக்க நிலையில், ஓரளவு தெரிவிக்கப்பட்டுவரும் தகவல்களிலிருந்து தமிழ்நாட்டுக்குத் திருத்தணியும் அதை ஒட்டிய சில கிராமங்களும் கிடைக்க இருக்கிறது என்று அறிந்து இம்மாநாடு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

"அதேபோது, ஏற்கனவே தமிழ்நாட்டுடன் பல்வேறு வகையாலும் தொடர்புகொண்டு இணைந்து வாழ்ந்துவரும் சில பகுதிகளில் வளமிக்க இடங்களும், செல்வக் காடுகளும். நீர்ப் பாசன வசதிகளும், ஆரணியாறு தேக்கத் திட்டப் பகுதியும், படாஸ்கர் தீர்ப்புப்படி அங்கு வாழும் மக்களுடைய விருப்பத்திற்கு எதிராக தமிழ்நாட்டிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு, ஆந்திரத்திற்கு அளிக்கப்பட இருப்பதறிந்து இம்மாநாடு வருந்துகிறது. சென்னை அரசு, தொடர்ந்து தமிழ்நாட்டுக்கு உரிமையுள்ள இடங்களை இழந்துவருவது கண்டு வருந்துவதுடன், தமிழரின் உரிமைகளைப் பாதுகாத்திடத் தவறிவரும் சென்னை அரசினரின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது.

"படாஸ்கர் அறிக்கையின் அடிப்படையில் திருத்தணிப் பகுதியைப் பெற்றுக்கொண்டு, அதே நேரத்தில் தமிழ்நாட்டிலிருந்து வேறு பகுதிகளை வெட்டாமலிருக்கும் முறையிலும், உரிமையை நிலைநாட்டத்தக்க வகையிலும், மக்களின் கருத்தை அறிந்து அதற்கேற்றபடி நடவடிக்கையில் ஈடுபடுமாறு சென்னை அரசினை இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது."

மாநிலங்களைத் திருத்தி அமைக்க முற்பட்ட குழு, மொழியை மட்டுமே தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணிக்குரிய அடிப்படையாகக் கொள்ளவில்லை. அதுபோன்றே மொழி ஒன்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு மாநிலங்களைத் திருத்தி அமைக்க வேண்டும் என, அக்குழுவிற்கு இந்தியப் பேரரசு கட்டளையும இடவில்லை. மொழிக்கு முதலிடம் கூட தரப்படவில்லை. குறிப்பிட்ட மாநிலத்தின் செல்வச் செழுமைக்கான வாய்ப்பையும் வசதியையுமே அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என இந்தியப் பேரரசு, அதையே அடிப்படையாகக்கொண்டு அக்குழுவும், மாநிலங்களைத் திருத்தி அமைத்தன.

அதுவுமன்றி, தாலுகா அடிப்படையிலும் மாநிலங்களைத் திருத்தி அமைக்க இந்தியப் பேரரசு இணங்கவில்லை. அத்துறையில தமக்கிடப்பட்ட ஆணைக்கொப்பவே மாநிலத் திருத்தக் குழுவும் செயல்படலாயிற்று. அதன் விளைவாக, மிகுதியும் தமிழ் மக்கள் வாழும் தேவிகுளம் — பீர்மேடு பகுதிகளைத் தமிழகம்இழக்கலாயிற்று.

ஆனல் இப்பொழுதோ, படாஸ்கர் என்பார் தமது முடிவிற்கு, சிற்றூரையே—ஏன்—ஒவ்வொரு சதுர மைலையுமே அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு இருக்கின்றார். மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்கு தாலுக்காவையே அடிப்படையாகக் கொள்ளக்கூடாது என அன்று கண்டிப்பாகக் கூறிய அதே இந்தியப் பேரரசுதான், ஒவ்வொரு சதுரமைலையும் அடிப்படையாகக்கொண்டு தமிழகத்திற்குத் தீர்ப்பளிக்கும்படி படாஸ்கர் என்பாருக்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறது! விந்தையான நடைமுறை! விசித்திரமான போக்கு!

தமிழ் மக்களுக்குப் பாதகமாகத் தரப்பட்டுள்ள படாஸ்கர் தீர்ப்பிற்கு சென்னை முதலமைச்சர் ஒப்புதல் தந்துவிட்டது கண்டு, இந்தியப் பேரரசின் உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் உளம்பூரித்துப் போகிறார். ஆந்திர—தமிழக இருதயமும்—ஒன்றோ பிரிந்திருந்தது போல் கற்பனை செய்துகொண்டு—தீர்ப்பின் விளைவாக நெருங்கிவிட்டது என்று அவர் பொருந்தா உரை புகல்கின்றார்.

முதலமைச்சர் காமராசர் மட்டுமல்ல தமிழகம். ஏன்—காங்கிரசுக் கட்சி மட்டுமே அல்ல தமிழகம். தமிழகத்தில் தமிழ் மக்கள் உள்ளனர் என்பதை பண்டித பந்த் போன்ற ஆதிக்கப் பிணி கொண்டிருப்பவர்களுக்கு அறிவுறுத்துகிறோம்.

செங்கற்பட்டு மாவட்டக் கழகம் இரண்டு மூன்று நாட்களுக்குமுன், திருவள்ளூர் பகுதியில் கூடி, படாஸ்கர் முடிவைக் கண்டித்திருப்பதுடன், ஆரணியாறு அணைக்கட்டும அதன் தொடர்புடைய நிலப்பரப்பும் தமிழகத்துடன் இருக்க வேண்டும எனச் செய்துள்ள தீர்மானத்தை பண்டித பந்த் அவர்களுக்குக் காணிக்கையாககுகின்றோம். அப்படித் தீர்மானித்திருப்பவர்களும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை நாம் அறிவோம். இருந்தாலும், அத்தீர்மானத்தில், அப்பகுதி வாழும் மக்களின் இதயத்துடிப்பு படிந்திருக்கின்றது என்ற உண்மையை, முதலமைச்சர் காமராசர் ஒருவர்தான் தமிழகத்தின் தலையெழுத்தை எழுதக்கூடியவர் என மயக்கம் கொண்டிருக்கும் உள்நாட்டு அமைச்சர் பந்த் அவர்களுக்கு அர்ப்பணிக்கின்றோம. அந்தோ! பறிபோகிறது! என்ற சோகக்குரல்தான் தமிழ் மக்களின் ஒருமித்த குரல் என்பதை டில்லி ஏகாதிபத்தியம் தெரிந்துகொள்ளட்டும்.

'இந்தித் திணிப்பு ஓர் மொழிப் பிரச்சினையல்ல'

'வடநாட்டு ஆதிக்கத்தை இங்கு திணிக்கும் முயற்சியாகும்'

'இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டமாகும்'

திருவண்ணாமலை மாநாட்டில் க. அன்பழகன் உரை

21—9—57 அன்று திருவண்ணாமலையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் :—

"யார் யார் இந்தி எதிர்ப்புக்கு மூலகாரணமாக இருந்தார்களோ அவர்களை நாங்கள் ஒரு நாளும் மறக்கமாட்டோம்; அவர்கள் எதற்காக அந்தப் போராட்டத்தை ஆரம்பித்தார்களோ அந்தப் போராட்டம், கடைசியிலே முழு வெற்றி பெறுகிற வரையில், நாம் நம் பயணத்தை நிறுத்திக்கொள்ள மாட்டோம்.

"நம்மைப் பொறுத்தவரையில் இந்தியைத் திணிப்பதற்குப் புதிய முறைகளையும், திட்டங்களையும் இந்த நாட்டை ஆளுகின்றவர்கள் தயாரிக்கின்ற நேரத்தில், அதை எதிர்ப்பதற்கான திட்டத்தையும், அழுத்தமான உள்ளத்தையும், எதிர்க்கின்ற மக்களின் தொகையைப் பெருக்குவதற்கான வழிவகைகளையும் நாம் கண்டுபிடித்தேயாக வேண்டும்.

"தி.மு. கழகம் வளர வளர, இந்தி எதிர்ப்பும் வளரத்தான் செய்யும். ஆனல், தி.மு.கழகத்தில் இல்லாத பலரும் இன்றையத் தினம் இந்தியைக் கட்டாயப்படுத்தக் கூடாது என்று—இந்தியை அரசாங்க மொழியாக்கக் கூடாது என்று — அரசாங்க மொழியாக்க வேண்டிய காலத்தைத் தள்ளிப்போட வேண்டுமென்று பல்வேறு கோணங்களிலே கருத்துத் தெரிவிக்கிறார்கள். ஆகவே, நம்முடைய முதற் கடமை, இந்தியை எதிர்ப்பதைப் பொறுத்தவரையில், யார் யார் இந்தியை எதிர்த்தாலும், எங்கெங்கிருந்து எதிர்த்தாலும், நாட்டின், எந்தெந்த மூலைகளிலிருந்து இந்தியை எதிர்க்கின்ற சக்தி புறப்பட்டாலும் அதன் உணர்ச்சியை மேலும் பெருக்குவதும், அதனாலே இந்த நாட்டிலுள்ள 100-க்கு 99 மக்கள் இந்தியை எதிர்க்கிறார்கள் என்பதை இனி வருங்காலத்தில் நடக்கின்ற ஒவ்வொரு தேர்தலிலும், ஒவ்வொரு பரீட்சையிலேயும், ஒவ்வொரு முறை பரீட்சை ஏற்படும்போதும், ஒவ்வொருமுறை நமக்கும் மாற்றாருக்கும் பலப்பரீட்சையை நாம நடத்திக்காட்ட வேண்டிய நிலைமை ஏற்படுகின்ற நேரத்திலும் நாம் இந்த நாட்டிலே நிலை நிறுத்திக் காட்டியாக வேண்டும்.

"இன்றைத்தினம் இந்தியை ஆதரிக்கின்றவர்களும் சிலர் இருக்கின்றார்கள் என்ற பேச்சை ஆரம்பிப்பதற்கு இடம் இருந்துகொண்டிருக்கிறது, காங்கிரஸ் கட்சி வெற்றியினலே! காங்கிரஸ் கட்சி இந்த நாட்டில் வெற்றி பெற்றுவிடுகின்ற காரணத்தினல் காங்கிரஸ்காரர்கள் பார்லிமெண்டில் இடம் பிடித்து விடுகிற காரணத்தினல், எப்படியோ தேர்தலில் பெரிய வெற்றி காங்கிரசுக்கே என்ற நிலைமை இன்னும் மாறாத காரணத்தினல், இந்த நாட்டைப் பொறுத்த வரையில், இந்திக்கு ஆதரவு இருப்பதாக ஒரு தவறான கருத்து —தவறானபோக்கு, இங்கிருந்து டெல்லிவரை எங்கே பார்த்தாலும் நிறைந்திருக்கிறது. அதை நாம் மாற்றவேண்டுமானல், இந்தியை எதிர்க்கின்ற இடம் காங்கிரசை முறியடிக்கும் இடமாக டெல்லி ஏகாதிபத்தியத்தை விரட்டியடிக்குமிடமாக இருக்க வேண்டும். நான் நிச்சயமாகச் சொல்லுவேன்—நாம் இன்னும் பல மடங்கு வளர்ந்தாக வேண்டும். இன்றைய வளர்ச்சி நம் மனதுக்குத் திருப்தியை அளித்தாலும் நம் இலட்சிய வெற்றிக்கு இந்த வளர்ச்சி போதுமானதாக இருக்க முடியாது.

"நம்முடைய இலட்சிய வெற்றிக்குப் போதுமானதாக இருக்க வேண்டுமானல் இன்றுள்ள சக்தி, பெற்றிருக்கிற ஆதரவு இன்னும் பல மடங்கு பெருகியாகவேண்டும்.

"இந்தி எதிர்ப்பு என்பது, ஒரு மொழிப் பிரச்சினையாகத்தான் தோன்றுகிறது. உண்மையில், அது ஒரு மொழிப் பிரச்சினை மட்டுமல்ல; அது ஒரு பெரிய தேசியப் பிரச்சினை. இதுவரை நீங்கள் காதாலே கேட்டுவந்த வழக்கப்படி, அகில இந்திய தேசியம் என்று வழங்கினர்களே, அது போன்ற தேசியப் பிரச்சினைகூட அல்ல—ஒரு நாட்டினுடைய விடுதலையோடு அடிப்படையாகக் கலந்திருக்கின்ற ஒரு பெரிய சிக்கலான பிரச்சினை; இந்தி கூடாது என்று நாம் சொன்னல், அதை எடுத்துக்கொண்டு ஏற்றுக்கொள்ளும்மனப்பான்மை ஆளும் கட்சிக்கு இருக்க வேண்டும்; ஆளும் கட்சி சென்னையில் மட்டும் இருந்தால் ஏற்றுக்கொண்டுவிடுவார்கள். சென்னையில் இருக்கின்ற ஆளும் கட்சியார், தாமாக எதையும் செய்யும் உரிமையுள்ளவர்கள் அல்ல; டில்லி ஆட்சியாளரின் தொடர்பிலே—பிடிப்பிலே சென்னை ஆட்சியிருப்பதனல்தான், நம் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. எனவேதான், இந்த நாட்டு ஆட்சி மாறியாகவேண்டும்.

"மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஆளும் கட்சியார் நியாயமான வாதத்தை நடத்தியிருக்கிறார்களா என்றால், இல்லை. 30 ஆண்டுக்கு முன்பே இந்தியை இந்த நாட்டில் புகுத்தினர்கள்; அப்பொழுதே தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் இந்தியை எதிர்த்தார்கள்; அவருடைய மெல்லிய குரல் அந்தக் காலத்து அரசாங்கத்தின் செவியில் ஏறவில்லை.

"மீண்டும் புகுத்தப்பட்டநேரத்தில் தமிழ்க்கடல் மறைமலையடிகளார் எதிர்த்தார்; பன்மொழிப் புலவர் கா. சுப்பிரமணிய பிள்ளை எதிர்த்தார்; தஞ்சையைச் சேர்ந்த தமிழ்வேள் உமா மகேசுவரம் எதிர்த்தார்; சர் ஏ. டி. பன்னீர்செல்வம், அப்பொழுதிருந்த தமிழ்ப் பேரறிஞர்கள் அனைவரும் எதிர்த்தனர்.

"'இந்தி நுழைவால் தமிழ் கெடும்; தமிழ்மொழிக்கு ஆபத்து' என்று எடுத்துச்சொல்லி அவர்கள் எதிர்த்தார்கள். அவர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!

ஆக்க வேலைகளில் கழகத் தோழர்கள்

மதுரை, செப். 29—

மதுரை நகர் 4-வது வார்டில் மீன் மார்க்கெட் பகுதியைச் சுற்றி வாழும் பொதுமக்கள் வெகுகாலமாக மீன் மார்க்கெட்டில் தபால் பெட்டி இல்லாததால் வெகு தூரம் சென்று தபால்களைத் தபால் பெட்டியில் போட வேண்டிய நிலை இருந்தது. இதைத் தவிர்க்க, மதுரை நகர் திராவிட முன்னேற்றக் கழக உட்கிளையான அறிவு வளர்ச்சிப் படிப்பகத்தார் பொதுமக்கள் ஆதரவுடன் 25—9—57 முதல் மீன் மார்க்கெட்டில் தபால் பெட்டி வைக்க ஏற்பாடு செய்துள்ளனர். தபால் பெட்டி வைத்ததிலிருந்து இப்பகுதிப் பொதுமக்கள் அறிவு வளர்ச்சிப் படிப்பகத்தின் நிர்வாகிகளைப் பாராட்டி தங்கள் நன்றியைத் தெரிவித்து வருகிறார்கள்.

அத்தபால் பெட்டியை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள அப்பகுதி மக்களை அறிவு வளர்ச்சிப் படிப்பகத்தார் கேட்டுக்கொள்கிறார்கள்.

ஊருக்கு உபதேசமா ?

திருச்சி, செப். 29—

காங்கிரசைப் பேணிக் காத்து வளர்த்த பண்டையத் தலைவர்கள் உள்பட இன்று பெரிய பதவியில் அமர்ந்துள்ள பண்டித நேரு வரை, 'வேலை நிறுத்தம்' தொழிலாளர்களுக்குத் தக்க சனநாயகக் கருவி என்று கூறியிருந்தும்கூட, சென்னைத் தொழில் அமைச்சர், 'வேலை நிறுத்தம்' பற்றி ஒரு தத்துவத்தைக் கண்டு பிடித்துவிட்டதாக நிருபர்களிடம் கூறியுள்ளார்.

மேற்கு நாடுகளில் அரசாங்க ஊழியர்களுக்கு வேலை நிறுத்தம் செய்யும் உரிமை இல்லையாம் !

பிரிட்டனில் சங்கங்கள் இருந்தும்கூட அரசாங்க ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதில்லையாம் !

பேச்சுவார்த்தைகள் மூலமே தகராறுகள் தீர்க்கப்படுகின்றனவாம் !

ஐரோப்பா நாடுகளைப் பின்பற்றியே நாமும் இருக்க வேண்டுமாம் !

தமிழ் நாடு என்.ஜி.ஓ.-க்கள் சங்கத்திற்கு அரசாங்கம் சமீபத்தில் விடுத்த எச்சரிக்கை பற்றிக் கேட்டபோதுதான் அவர் இவ்வாறு நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஐரோப்பிய நாடுகளில் அரசாங்கம் எவ்வளவு பொறுப்பு உணர்ச்சியுடன் இயங்குகின்றது —அமைச்சர்கள் எவ்வளவு திறமையுடன் நடந்துகொள்கின்றனர் என்பதைப் பற்றி அவர் ஏதும் கூறவில்லை.

அரசாங்க ஊழியர்களுக்கு அந்த நாடுகளில் காட்டப்படும் சலுகைகள் பற்றியோ, அரசாங்கம் கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றித்தரும் நிலையைப் பற்றியோ அவர் ஏதும் கூறவில்லை!

குருதிக் கொடைக்கு அதிகப் பணம் !

சென்னை, செப். 28—

வைத்திய விடுதிகளில் நல்ல இரத்தம் அளிப்பவர்களுக்கு இதுவரை ரூ. 5 தரப்பட்டு வந்ததை உயர்த்தி, இனி ரூ. 7 தர அரசாங்கம் தாக்கீது பிறப்பித்துள்ளது.

சென்னை, செப். 27—

நிர்வாகத்தில் தொழிலாளர்களும் பங்கு பெறும் திட்டத்தை குரோம்பேட்டையில் உள்ள அரசாங்கப் போக்குவரத்து நிறுவனப் பட்டறையில் முதல் முதல் அமுல் செய்யப்படும் என்று தெரியவருகிறது.

கரூரில் காலிகளின் விஷமத்தனம்

திராவிட நாடு விடுதலை வார விழா நிகழ்ச்சியில் கல்வீச்சு

போலீசார் விரைந்துவந்து அமைதி காத்தனர்

கரூர், செப். 24—

திராவிட நாடு விடுதலை வார விழாவையொட்டி கரூரில் நடந்த ஓர் இசை நிகழ்ச்சியின்போது காலிகள் கல்லெறிந்து, கலவரம் விளைவித்திருக்கின்றனர். இதனால், கூட்டத்திலிருந்த சிலருக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது.

உடனே போலீசார் வந்து அமைதி நிலைநாட்டினர்: கல்லெறிந்த காலிகளைத் தேடிவருகின்றனர்.

22—9—57-ல் திராவிட நாடு விடுதலை நாள் கொண்டாடப்பட்டது. காலை 8 மணியிலிருந்து இரவு 9 மணிவரை கரூர் நகர தி. மு. க. செயலாளர் தோழர் எம். கே. கரிகாலன் அவர்களால்நகரெங்கும்கொடிகள் யேற்றி வைக்கப்பட்டன; சுமார் 50 இடங்களில் கொடியேற்று விழாவும், சில வார்டுகளில் பொதுக் கூட்டங்களும், இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அன்று மாலை 7 மணிக்கு 15-வது வார்டில் கொடி யேற்றுவிழா முடிந்ததும், இசை நிகழ்ச்சி நடந்த சமயம் காலிகள் கற்களை எறிந்து குழப்பம் உண்டாக்கினர்.

தாய்மார்கள் கூடியிருந்த பகுதியில் கற்கள் சரமாரியாக வந்து விழுந்தன; அதன் காரணமாக, திருச்சி மாவட்ட தி. மு. கழக—கரூர் பிரதிநிதி தோழர் அ. சங்கப் பிள்ளை அவர்களின் மகள் தனம் பெண்ணுக்கு மண்டையில் கல் பட்டு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சை நடைபெற்று வருகிறது. கற்கள் கூட்டத்தை நோக்கி விழுந்ததும் தாய்மார்கள் திக்குத் தெரியாமல் ஓடியதில் பலர் கீழே விழுந்து காயம் பட்டிருக்கிறார்கள். 19-வது வார்டில் உள்ள தி. மு. கழகக் கொடி மரத்தையும் காலிகள் ஒடித்து எடுத்துச் சென்றுள்ளார்கள். உடனே போலீசுக்கு அறிவிக்கப்பட்டு போலீசார் விரைந்து வந்து அமைதிகாத்தனர். மேற்கொண்டு அசம்பாவிதங்கள் நடைபெறாமல் சிறந்த முறையில் இசை நிகழ்ச்சியும், சொற்பொழிவும் நடைபெற்றன.

சேலம் மாவட்ட மதுவிலக்கு ஆலோசனைக் குழு

எம்.பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டார்

சேலம் மாவட்ட மதுவிலக்கு ஆலோசனைக் குழுக் கூட்டம் 24-ந் தேதி மாலை மாவட்டக் கலெக்டர் எம். ஜி. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

சென்ற ஜுன் மாதத்தில் 2,010 பேர் சம்பந்தப்பட்ட 1,995 மதுவிலக்கு வழக்குகளும், ஜூலை மாதத்தில் 2,2,64 பேர் சம்பந்தப்பட்ட 2;233 மதுவிலக்கு வழக்குகளும், ஆகஸ்டு மாதத்தில் 1,916 பேர் சம்பந்தப்பட்ட 1,904 மதுவிலக்கு வழக்குகளும் சேலம் மாவட்டத்தில் போலீசாரால் பதிவு செய்யப்பட்டனவென்று சேலம் மாவட்டத் தலைமை போலீஸ் அதிகாரி கே. விசுவநாதன் கூறினார்.

ஜுன், ஜூலை, ஆகஸ்டு ஆகிய இம் மூன்று மாதங்களிலும் சேலம் மாவட்டத்தில் மொத்தம் 6,190 பேர் சம்பந்தப்பட்ட 6,132 மதுவிலக்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த மூன்று மாதங்களிலும் கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்காக வைத்திருந்த 30,300 காலன் அளவு ஊறல் தண்ணீர் போலீசாரால் அழிக்கப்பட்டது என்றும் கூட்டத்தில் கூறப்பட்டது.

மதுவிலக்கு வழக்குகளுக்கு விதிக்கப்படும் தண்டனைகளை அதிகரிக்க வேண்டும் என்று ஏ. சுப்பிரமணியம் எம்.எல்.சி. கூறினார்.

குடிக்கும் பெரிய மனிதர்களையும் பிடித்து வழக்குத் தொடர வேண்டும் என சேலம் மாவட்ட காங்கிரஸ் தலைவர் எஸ். நாகராஜ மணியகார் குறிப்பிட்டார்.

எம். பி. சுப்பிரமணியம், ஆர். கந்தசாமி, எம். ஆர். கந்தசாமி, எம். பி. பெரியசாமி, ஹேமலதா-சுப்பிரமணியம் முதலிய எம்.எல்.ஏ.-க்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

கூழ் வெல்லத்தைத் தடை செய்தால் கள்ளச் சாராயம் காய்ச்சுவது கணிசமான அளவுக்குக் குறையும் என டி. தீர்த்தகிரி கூறினார்.

கூழ் வெல்லத்தைத் தடை செய்யும்படி ஏற்கனவேயே அரசாங்கத்திற்குத் தீர்மானம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் இப்பிரச்சினை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகவும் மாவட்டக் கலெக்டர் கூறினார்.

மதுவிலக்கு வழக்குகளில் கொடுக்கப்படும் தண்டனைகள் கோர்ட்டுக்குக் கோர்ட் வித்தியாசப்படுவதாகவும், மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் நடத்தும் பொருட்டும், போதிய அளவு தண்டனைகளைக் கொடுக்கும் பொருட்டும் எல்லாக் கோர்ட்டுகளிலும் ஒரே மாதிரியான தண்டனைகளை விதிக்கக் குறைந்தபட்ச தண்டனையை நிர்ணயம் செய்யும் வகையில் தற்போதுள்ள மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்துமாறும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேறியது. (ந. நி.)

டில்லி உறவு தரும் பாடம்

சென்னை, செப். 30—

விலை உயர்வைத் தடுத்துக் கட்டுப்படுத்தவும், ஏழை எளிய மக்களுக்கு மலிவான விலையில் அரிசி தரும் நல்ல நோக்கத்துடனும் சென்னை அரசாங்கம் திறந்த 'நியாய விலைக் கடை'கள் வெறும் கண்துடைப்பு நாடகநிதிற்குப் பிறகு இடுகாட்டை நோக்கிப் பயணமாகும் கட்டத்தை வந்தடைந்துள்ளன.

சென்னை மாநிலத்தில் உள்ள 1,000 நியாய விலைக் கடைகளில் பாதியை அக்டோபர் முதல் தேதியன்று 'மூடுவிழா' நடத்துவதற்கான பெரும் பணியை சென்னை அரசாங்கமும்—குறிப்பாக உணவு அமைச்சர் இலாகாவும் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியும் உள்நாட்டில் கொள்முதல் செய்யப்படும் அரிசியும் வட மாநிலங்களுக்கு மட்டும் அளிக்கும் உள்நோக்குடன் சென்னைக்கு டில்லி கைவிரிப்பதும், அரிசிதர மறுப்பதும், தென்னவர் நன்மையை அலட்சியப்படுத்தும் போக்கும் இந்த அவல நிலையை சென்னைக்கு ஏற்படுத்தியுள்ளன. 'ஏக இந்தியா' 'எல்லோரும் இந்தியர்'கள் என்ற இச்சக மொழி, எவருக்குப் பயன்படுகிறது என்பதை இது நன்கு வெளிப்படுத்துகிறது.

முதுகுளத்தூர் தி. மு. க.

கலவரம் பற்றி முடிவுகள்

கடந்த இரண்டு வாரகாலமாக நடைபெற்றுவரும் கலவரத்தைப் பற்றி 25—9—57 அன்று முதுகுளத்தூர் தி. மு. கழகக் கிளையின் செயற்குழு கூடி ஆராய்ந்து, கீழ்க்கண்ட முக்கிய முடிவுகளைச் செய்துள்ளது.

அரசாங்கம் துப்பாக்கியால் சுடும் அளவுக்கு வன்முறையில் ஈடுபட்டதற்கு வருந்தியும், துப்பாக்கியால் சுடப்பட்டவர்களுக்கும், வெட்டுண்டு மாண்டவர்களுக்கும் கிளைக் கழகம் இரங்கல் தீர்மானத்தின் மூலம் அனுதாபம் தெரிவித்துக் கொண்டுள்ளது.

துப்பாக்கியால் சுடப்பட்டு மாண்டவர்களுடைய குடும்பத்துக்கும், வீடிழந்த மக்களுக்கும் அரசாங்கம் உடனடியாக நிவாரணம் அளித்து, அறவழியில் அமைதி நிலவச்செய்ய வேண்டும் என்று மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கூட்டம் தோழர் முத்துசாமி அவர்கள் குடிலில், செயலாளர் தோழர் அழகர்சாமி தலைமையில் நடைபெற்றுள்ளது.

சோஷலிஸ்டுக் கட்சி அறிக்கை

முதுகுளத்தூர் சம்பவங்கள் பற்றி ஆராய்ந்து உண்மைகளை வெளிப்படுத்த மத்திய அரசாங்கம் ஒரு நீதிபூர்வமான விசாரணை நடத்தவேண்டும் என்று தமிழ் நாடு சோஷலிஸ்டுக் கட்சித் தலைவரும், டில்லிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. எஸ். சி. சி. அந்தோணிப் (பிள்ளை) அவர்கள், அறிக்கையொன்று வெளியிட்டுள்ளார்.

பம்பாய் தாழ்த்தப்பட்டோர் சங்க முடிவுகள்

பம்பாயில் வசிக்கும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் தங்கள் சங்கத்தின் அவசரக் கூட்டம் ஒன்றை 24—9—57 மாலை 6-மணிக்கு 'குஸ்மட்' நிலையத்தில் திரு. எஸ். கே. மாயக்கிருட்டினன் தலைமையில் கூட்டி, முதுகுளத்தூரில் நடைபெறும் கலவரம்பற்றி ஆராய்ந்து கலவரத்திற்கு வருத்தம் தெரிவித்தும், உயிர்இழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், கலவரத்தை ஒடுக்கி அறவழியில் அமைதி காண மாநில அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளனர்.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கோரிக்கை

சென்னை நகரிலுள்ள கல்லூரிகளில் படிக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் திரு. அய்யாக்கண்ணு எம்.பி. அவர்கள் தலைமையில் 22-9-57 அன்று கூடி, முதுகுளத்தூர் கலவரம்பற்றி வருத்தம் தெரிவித்துக்கொண்டு, மத்திய அரசும், மாநில அரசும் பொதுமக்களிடை நிலவிடும் அச்சத்தைப் போக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

தாழ்த்தப்பட்டோர் சம்மேளனப் பொதுச்செயலாளர் வேண்டுகோள்

முதுகுளத்தூர் கலவரம் மேற்கொண்டு நீடிக்காவண்ணம் மாநில அரசு செயல்பட வேண்டுமென்றும், இந்தக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நிவாரணம் அளிக்க வேண்டுமென்றும், உடனே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த எம். எல். ஏ.-க்கள், எம்.பி.-க்கள் கலவரப் பகுதிகளுக்கு விரைந்து உண்மைகளை அறிந்து அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டுமென்றும் சென்னை மாநிலத் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனப் பொதுச்செயலாளர் தோழர் எம். கிருஷ்ணசாமி விடுத்திருக்கும் ஒரு அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

நெல்லை மாவட்ட தி. மு. கழகம்

செயற்குழுக் கூட்ட முடிவுகள்

சங்கரன்கோவில், செப். 30—

நெல்லை மாவட்ட தி.மு. கழகச் செயற்குழுக் கூட்டம் மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் மேலப்பாளையம் தி. மு. கழக அலுவலகத்தில் 15—9—57 பகல் 12-30 மணியளவில் நடைபெற்றது; அதுபோது, நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு :—

கலைவாணர் என். எஸ். கிருட்டினன் மரணத்திற்கு இக்குழு வருந்துவதோடு, அன்னார் குடும்பத்தார்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாவட்டச் செயலாளர் வரவு - செலவுக் கணக்கு சரி பார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்டச் செயலாளர் தந்த பொறுப்பைக் கவனித்துவந்த துணைச் செயலாளர் அவர்களால் கொடுக்கப்பட்ட வரவு - செலவுக் கணக்குகளும், 'ரிக்கார்டு'களும் ஒப்புக்கொள்ளப்பட்டன.

நெல்லை மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாட்டை தூத்துக்குடியில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது; மாநாட்டிற்கு வரவேற்புக் குழுத் தலைவராக மாவட்டச் செயலாளரும்; செயலாளர்களாக தூத்துக்குடி கே. ஆர். இராமலிங்கம், கோவில்பட்டி டபிள்யூ. டி. துரைசாமி ஆகியோரும்; பொருளாளராக எம். எஸ். சிவசாமியும் ; தொண்டர் படைத் தலைவராக தூத்துக்குடி ஜோசப்பும்; விளம்பர உறுப்பினர்களாக முக்கூடல் மா. சு. முத்துக்குட்டி, கடையநல்லூர் ஆ. திராவிடமணி ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் எம். எஸ். சிவகாமி அவர்கள் கழக வளர்ச்சி குறித்துப் பேசிய பின் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் நன்றிகூற கூட்டம் 4-30 மணியளவில் முடிவுற்றது.

மேலப்பாளையம் கிளைக் கழகத்தார் பகல் உணவு ஏற்பாடு செய்து கூட்டத்திற்கு வந்திருந்த மாவட்டப் பிரதிநிதிகளுக்கு உணவு அளித்தனர்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

சென்னை, செப். 28—

செப். 14-ம் நாளுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவு இரண்டு புள்ளி குறைந்து 369-ல் நின்றது ; காய்கறி, இறைச்சி ஆகியவற்றின் விலை குறைந்ததே இதற்குக் காரணம்.

'நம் நாடு' இதழ்

விற்பனையாளர் தேவை

✱

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம்நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை ; நிபந்தனைகளுக்கு விண்ணபித்துக் கொள்க :—

பூதலூர்
திண்ணனூர்
மதுராந்தகம்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேலூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)
பாகசாலை (மாயூரம் வட்டம்)
சந்திரப்பட்டி

—நிர்வாகி : 'நம் நாடு'

இந்தி ஏகாதிபத்தியத்தை ஒழிக்க

க. அன்பழகன்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்ன நேரத்தில் தமிழ் மொழிக்கு ஆபத்து என்பதைத்தான் அவர்கள் கண்டார்கள். அப்பொழுது அது ஒரு மொழிப் பிரச்சினைதான்.

"வெறும் மொழிப் பிரச்சினைக்காக இந்தியைப் புகுத்தவேண்டிய அவசியம் இப்பொழுதில்லை; இது பண்டித நேருவுக்கும் நன்ருகத் தெரியும். இந்தியாவில் விடுதலை இயக்கம் வெற்றிபெறவும் ஆங்கிலம்தான் பயன்பட்டது; உத்தமர் காந்தியடிகளின் பெருமை உயர ஆங்கிலம்தான் உதவியது; பண்டித நேரு அகில உலகப் புகழ் பெறுவதற்கு ஆங்கிலம் தான் பயன்பட்டது; இந்தியாவில் ஏற்படுகின்ற சிக்கலை நல்ல நூல்களைக் கொண்டு ஆராய்ந்து நீக்கிக்கொள்ள ஆங்கிலம்தான் உதவி செய்கிறது; இருந்தும் இந்தியைப் புகுத்த வேண்டுமென்கிருர்களென்ருல் என்ன அர்த்தம்? 'இந்தியைப் புகுத்தியே தீருவோம்; இந்தி உங்களை ஆளும்; இந்திக்கு அடிமைப்பட்டே ஆகவேண்டும்' என்று வடநாட்டவர் கூறுகிருர்கள் என்ருல் இதற்கு என்ன பொருள்?

"எனவே, இது மொழிப் பிரச்சினை மட்டுமல்ல — வடநாட்டு ஆதிக்கத்தைத் தென்னுட்டில் நிலைநிறுத்தச் செய்யும் முயற்சியாகும்.

"வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு, 'இந்தியா ஒரே நாடு; இந்தியை எல்லோரும் ஏற்றுக்கொள்கிருர்கள்; இங்கு இரண்டு வகை மொழிக் குழுக்கள் இல்லை; இரண்டு கலைகள் இல்லை; எல்லோரும் இந்தியர்கள்' என்று எடுத்துக் காட்டுவதற்காகத்தான், இந்த அளவு இந்தியை வேகமாகப் புகுத்துகிருர்கள்; நாம் ஏற்றுக்கொள்கிற நிலை ஏற்படுமானல், நாம் அடிமைப்பட்டுவிட்டவர்களாவோம்.

"இந்தி இங்கு ஆதிக்க மொழியாக வருகிறது; அரசியல் மொழியாக அல்ல—பொது மொழியாக அல்ல—துணை செய்கிற மொழியாக அல்ல—பயன்படுகிற மொழியாக அல்ல—இசை, சிற்பக் கலைகளை, நாகரீகத்தை வளர்க்கக்கூடிய மொழியாக அல்ல—தென்னுட்டு மக்களை அடிமைப்படுத்தும் மொழியாக, காட்டுமிராண்டி மொழியாகத்தான் இங்கு புகுத்தப்படுகிறது.

"அந்த இந்திக்காக நம் பணம் செலவு செய்யப்படக்கூடாது. விருப்பப் பாடமாகக்கூடப் பள்ளிகளில் இந்தியை வைக்க இடமளிக்கக்கூடாது. யாருக்கேனும் தேவைப்பட்டால், தனிப்பட்ட முறையில் அவர்கள் படித்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் வரிப்பணம் வீணுகாது.

"இந்த நிலை ஏற்பட திராவிட நாடு திராவிடர்களுக்கு ஆகியே தீரவேண்டும். நம்முடைய இந்தி எதிர்ப்பு இயக்கம் அந்த இடத்திலேதான் கொண்டுபோய் நிறுத்தும்.

"இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒரு மகத்தான விடுதலைக்கான போராட்டம்; ஒரு சுதந்தரப் போட்டம்; நம் வாழ்க்கைக்கான போராட்டம்; நம் எதிர்கால சந்ததிக்கான போராட்டம்; நம் நாடு ஒரு மகத்தான நிலை பெறுவதற்கான போராட்டம்; வெற்றி நிச்சயம் காண்போம்."

சென்னை 14-வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

2—10—57 இரவு 8 மணியளவில் பாரிஸ் வெங்கடாசலய்யர் தெரு, 18 எண்ணுள்ள இல்லத்தில், மேற்படி வட்ட தி. மு. க. கிளை செயற்குழுவின் அவசரக் கூட்டம் நடைபெறும். பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

கீரப்பாளையத்தில் அண்ணு

சிதம்பரம் வட்டம் கீரப்பாளையம் ஊராட்சி மன்றத்தின் சார்பில் கடந்த 25-8-57-ல் அண்ணு அவர்களுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ஏ.கே.இிராமசாமி வரவேற்பிதழ் வாசித்தளித்தகாட்சி.

டெல்லிக்கு சி. ஆர். அறைகூவல்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சட்டம், 'இந்தியா ஒரு பெடரல் யூனியன்' என்று கூறுகிறது.

"எனவே, ஆட்சி மொழி போன்ற முக்கியமான விஷயங்களில் செய்யப்படும் எந்த ஒரு மாற்றமும், ஒவ்வொரு மாநிலத்திறுடையவும் சம்மதத்தைப் பெற்றிருக்க வேண்டும். எந்த மாற்றமும் செய்யப்படுவதற்குமுன், ஒவ்வொரு மாநிலத்திற்கும் 'ரத்து' அதிகாரம் பிரயோகிக்கும் உரிமை தரப்பட வேண்டும். ஒருமனதான சம்மதம் இல்லாதபோது இந்தியை ஆட்சி மொழியாக ஆக்குவது அநியாயமானது—நேர்மையற்றது—வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

"இந்தியை வேண்டுமானல் கற்றுக்கொள்ளலாம், ஆனல் அதனை ஆட்சிமொழியாக்கக் கூடாது.

"சுதந்தரம் மறுப்பதற்கு பிரிட்டன் இரண்டு காரணங்களை காட்டிற்று; 'பல மதங்கள் இருக்கின்றன; எனவே, சுய ஆட்சி பெற இந்தியா தகுதியற்றது' என்று கூறியது பிரிட்டன். இந்தியாவைப் பிரித்து, முதல் கஷ்டத்தைச் சமாளித்தார்கள்.

"மொழிகளைப் பொறுத்து, இந்தியாவை மொழி வழி பிரிக்கவேண்டும் என்ற இயக்கம் பெரும்ளவு வெற்றிபெற்றுள்ளது. பிரதேச உணர்வுகள் நிரந்தரமாகிவிட்டன; இப்போது, அவரவர்கள் தங்களின் தாய்மொழிமீதுதான், சுதந்திரத்தைவிட அதிகமாகப் பற்றுக் கொண்டிருக்கிருர்கள். ஒருமுறை சுதந்தரத்தைக்கூட இழந்திருந்த மக்கள், தங்களின் தாய்மொழியை மட்டும் இழந்திருந்ததில்லை.

"தேசிய மொழி என்பது, உண்மைகளைப் பொறுத்த ஒரு பிரச்சினையாகும்; சர்க்காரின் ஒரு உத்தரவைப் பொறுத்தது அல்ல.

"இந்தியை ஒரே தேசிய மொழியாக்குவது என்பது முடியாத காரியம், மேலும், இந்தி என்றைக்காவது இந்தியாவின் தேசீய மொழியாகுமென எண்ணுவதுகூட வெறும் பகற்கனவாகும்.

"ஆட்சி மொழியாக்குவதற்கு வசதியான மொழியல்ல இந்தி—என்பது, ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது; ஆனல், அதனை அப்படி ஆட்சி மொழியாக்க விரும்புகிருர்கள் — என்றைக்காவது எதிர்காலத்தில் அது அந்த இடத்தைப் பெறும் என்ற நம்பிக்கையில். இது நியாயமா? நேர்மையா?

"ஒன்றை வைத்திருக்கும்போது அதன் அருமை தெரிவதில்லை; ஆங்கிலத்தை இழந்துவிட்ட பின்தான், அதன் அருமை நமக்குத் தெரியவரும்.

"ஆங்கிலம் ஒரு அன்னிய மொழியாயிருந்தும் அதனை நாம் கற்றிருக்கும்போது, இந்தி கற்றுக்கொள்ளுவதில் அவநம்பிக்கை காட்டுவது வேடிக்கையாயிருப்பதாக வடநாட்டவர் வாதிடுகின்றனர்.

"ஆங்கிலம், பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்ளப்படவில்லை; மூன்று தலைமுறைகளில் கற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது; ஆனல், இந்தியில் நாம் இன்னும் ஆரம்பப் பாடமே துவங்கவில்லை.

"நிலைமை இப்படி இருக்கும் போது, ஒரு குறிப்பிட்ட தேதியில் ஆங்கிலத்தை ஒழித்துவிட வேண்டுமென்பது நேர்மையா? நீதியா? அப்படிச் செய்வது, இந்தி வழங்காத பகுதிகளில், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குழப்பத்தையும் தான் உண்டுபண்ணும்.

"இந்தி ஆட்சிமொழியாக அங்கீகரிக்கப்பட்டதில், இந்திப் பிரதேச மக்கள் மகிழ்கின்றனர், அதன் காரணத்தை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. அவர்கள் மனமகிழ்வதற்குக் காரணம், இந்தி ஆட்சிமொழியானல், நிரந்தரமான அனுகூலம் அவர்களுக்கு உண்டு என்பதுதானே?

"எனவே, என்றென்றைக்கும், ஆங்கிலமே டெல்லி சர்க்காரின் ஆட்சிமொழியாகவும், மாநிலங்களுக்கிடையே கடிதத் தொடர்பு மொழியாகவும் நீடித்தாகவேண்டும் என்பது எனது உறுதியான கருத்தாகும்.

"ஆங்கிலத்தில் திறமையும் தேர்ச்சியும் பெற்றிருப்பதுபோல நாம், இந்தியிலும் திறமையும் தேர்ச்சியும் பெறவேண்டுமானல், இந்தி துவக்கப்பள்ளியிலிருந்து உச்சகட்டம் வரை கட்டாய போதனு மொழியாக ஆக்கப்பட வேண்டும்; அப்படிச் செய்தாலும், இந்தியை ஆட்சிமொழியாக்குவதற்கு, மூன்று தலைமுறைகள் ஆகும்.

"கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் இந்தியைக் கட்டாயப் போதனு மொழியாக ஆக்குவதற்கு மத்திய சர்க்கார் முன்வருவார்களா? அப்படிச் செய்ய அவர்களுக்குத் துணிவு இல்லை; ஏனெனில், அவர்கள் ஓட்டுப் பெற்றாகவேண்டும். கட்டாய இந்தியைக் காட்டி ஓட்டுப் பெற முடியுமென நான் நினைக்கவில்லை"

கே. வி. கே. சாமி நினைவு நாள்

2—10—57 மாலை 6 மணிக்கு சென்னை 5-வது வட்டம் தி.மு.க. கிளை சார்பில் கழகப் பணிமனையில் (2, தளசிங்க கிராமணி தெரு) தோழர் வே சுந்தரம் தலைமையில் கே. வி. கே. சாமி நினைவு நாள் கூட்டம் நடைபெறும். தோழர்கள் கி. இராசேந்திரன், எஸ். ஆர். நாதன், இரா. இளந்தென்றல் மற்றும் பலர் பேசுவர்.

க. அன்பழகன்

எம்.எல்.ஏ., சுற்றுப்பயணம்

★

அக். 1 : வேலூர் (சேலம்)
2 : பீளமேடு
4 : சென்னை
5 : மதுரை

இந்தியாவிலேயே மிக பழைமையானதாகும்

சென்னை நகரசபை பற்றி கமிஷனர் தகவல்

சென்னை, செப். 30—

"இந்தியாவிலேயே மிகப் பழைமையான நகரசபை சென்னை நகர சபையாகும்; 1688 செப்டம்பர் 29-ந் தேதியன்று கிழக்கிந்திய நிறுவனம் ஒரு சாசனத்தின் மூலம் இதை ஏற்படுத்தியது. நகரின் பரப்பளவு 50 சதுர மைல்கள்; மொத்தம் 15-இலட்சம் பேர் வாழ்கின்றனர்"

என்று சென்னை நகரசபை ஆணையாளர் திரு. பாலசுந்தரம் அவர்கள், நேற்று நடைபெற்ற நகரசபை நினைவுநாள் விழாவில் தெரிவித்துள்ளார்.

கீழத்தூவல் துப்பாக்கிப் பிரயோகம்

விசாரணை முடிந்தது

சென்னை, செப். 30—

சென்ற செப்டம்பர் 14-ந் தேதியன்று கீழத்தூவலில் நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரியான திரு. வெங்கடேசுவரன் தனது அறிக்கையை அரசாங்கத்திடம் தந்துள்ளாராம்.

'அறிக்கையில் கண்டுள்ள இலக்குகளை வெளியிடுவது பற்றி அரசாங்கமே முடிவு செய்ய வேண்டும்' என்று, நிருபர்களிடம் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் கொல்லப்பட்டனர் என்பது நினைவிருக்கும்.

'தீஞ்சுவை நீரோடை!'

கடலூர், செப். 30—

கடலூருக்கு அருகில் மேட்டுக்குப்பம் என்னும் கிராமத்தில் தீஞ்சுவை நீரோடையை சென்னை நிலவரி அமைச்சர் திரு. மாணிக்கவேலர் திறந்துவைத்துள்ளார்.

இந்த ஓடையில் 7 நீரூற்றுகள் உள்ளன. இதில் ஆண்டு முழுவதும் தண்ணீர் வற்றுவதில்லையாம். இதற்கென சமுதாய நலத் திட்டத்தின்கீழ் ரூ. 9,500 செலவிடப்பட்டுள்ளதாம்.

இந்தத் தீஞ்சுவை ஓடைத் திறப்பு விழாவுக்குத் திரு. ஓ. பி. இராமசாமி தலைமை வகித்தார்.

கழகக் கூட்டங்கள்

★

தண்ணீர்ப்பள்ளி :
(குளித்தலை வட்டம்)
அழகிரி திடலில்
தி. மு. கழகத் துவக்கவிழா
3—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : க. முத்து
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
தி. வி. முத்துகிருட்டினன்
வை. சிவராசு

★

ஆலந்தூர் :
தருமராசா கோவில் தெருவில்
3—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : அருணுசலம்
பேசுவோர் :
என். வி. நடராசன்
ஆர். எஸ். பாண்டியன்

★

நரசிங்கன்பேட்டை :
கீழத்தெருவில்
3—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : சு. பத்மநாபன்
பேசுவோர் :
காஞ்சி-கல்யாணசுந்தரம்
போ. தருமன்
கோ. சி. மணி

டாக்டர்

எஸ். தருமாம்பாள்

67-ம் பிறந்த நாள் விழா

2—10—57 காலை 9 மணிக்கு சென்னை மணவழகர் மன்றச் சார்பில் டாக்டர் எஸ். தருமாம்பாள் அவர்களின் 67-ம் பிறந்த நாளைக் கொண்டாட டாக்டர் சி. நடேசனுர் இரவுப் பள்ளி மாணவ மாணவிகள் ஊர்வலமாகச் சென்று மேற்படி அம்மையாருக்குத் தமிழ்த்தாய் வணக்கம் கூறி, அவர்கள் மீண்டும் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட உடல்நலம் சீரடைய வேண்டுமென்னும் தங்கள் விழைவைத் தெரிவித்துக்கொள்வர்.

சென்னை—மயிலை அறிவு வளர்ச்சி மன்ற முதலாண்டு விழா

2—10—57 மாலை 6 மணிக்கு மயிலை தலையாரி தெருவில் (அமில்டன் வாராவதி பஸ் நிலையம் அருகில்) தோழர் கா. அப்பாதுரை அவர்கள் தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தோழர்கள் கி. மனோகரன், பி. இராமசாமி, தோழியர் அலமேலு-அப்பாதுரை மற்றும் பலர் பேசுவர்.

சோழவந்தான் நெடுஞ்செழியன் படிப்பக ஆண்டு விழா

3—10—57 மாலை 6½ மணிக்கு சோழவந்தான் மேற்கு வட்டாரம் நெடுஞ்செழியன் படிப்பக இரண்டாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் மேல ரத வீதியில் தோழர் எஸ். பழனியாண்டவன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கி. மனோகரன், மதுரை எஸ். முத்து, கூ. குருசாமி, மா. வேலன் மற்றும் பலர் பேசுவர். காலை 11 மணிக்கு ஆண்டு விழாவும், கலைவாணர் என். எஸ். கே. படத் திறப்பும் நடைபெறும்.

இராசிபாளையத்தில்

'நம் நாடு' விற்பனையாளர்
திரு. இரா. ப. அய்யாசாமி
செயலாளர், தி. மு. கழகம்,
இராசிபாளையம் அஞ்சல்
(கோவை மாவட்டம்)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

அக். 13: இந்தி எதிர்ப்பு நாள் கொண்டாடுக!